சுருக்கம்

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2014–15ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டம்–15 மாவட்டங்களில் செவித்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான மண்டல ஆரம்பநிலை பரிசோதனை மையம் துவக்குதல்–ரூ.3,16,50,000/– நிதி ஒப்பளிப்பு செய்வது–ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.51 நாள்: 01–09– 2014

ஜய, ஆவணி 16,

திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:

1. அ.சா.கு எண்.13753/மா.தி.ந.3/2013–5, நாள் 27.05.2014.
2. நிதித் துறையிடமிருந்து பெறப்பட்ட 2014–15ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்ட பட்டியல்.

------

**ஆணை:**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் 2014–15 பகுதி–II திட்டத்திற்கென சமர்ப்பித்த கருத்துருவில், 15 மாவட்டங்களில் செவித்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான மண்டல ஆரம்பநிலை பரிசோதனை மையம் துவங்குவது அவசியம் என தெரிவித்து, இப்பரிசோதனை மையத்தின் குறிக்கோள்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

இந்தியாவில் பிறக்கும் 1000 குழந்தைகளில் 5 குழந்தைகள் பிறவியிலேயே செவித்திறன் குறையுடன் பிறக்கின்றன என்றும், இவ்வாறு பிறக்கும் குழந்தைகளில் இக்குறையை 1 முதல் 3 வயதிற்குள் கண்டறிந்து நடவடிக்கை எடுத்தல், குழந்தையின் பேச்சு மற்றும் மொழித்திறன் வளர்ச்சிக்கு இக்காலகட்டம் மிகவும் முக்கியமானது என்றும், மேலும் நான்கில் மூன்று குழந்தைகள் நடுக்காதில் ஏற்படும் நோயால் (Otitis Media) பாதிக்கப்படுகின்றனர் என்றும், காதில் நோய் ஏற்பட்டால் தற்காலிகமாக செவித்திறன் குறையும் என்றும், அதனால் பேச்சுத் திறனும், மொழித்திறனும் பாதிப்படையும் என்றும், இந்நோயினை குணப்படுத்தாமல் விட்டுவிட்டால், இக்குறை நிரந்தரமாகிவிடும் என்றும் செவித்திறன் குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, உரிய சிகிச்சையும், பயிற்சியும் அளித்தால், குழந்தையின் பேச்சு (ம) மொழித்திறன் வளர்ச்சி, அவர்களின் வயதினையுடைய குழந்தையின் இயல்பான பேச்சு (ம) மொழித்திறன் வளர்ச்சிக்கு இணையாக இருக்கும் என பல்வேறு ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன என்றும் தெரிவித்துள்ளார். மேலும், குழந்தை பிறந்தவுடனேயே செவித்திறன் குறையை கண்டறிய

பரிசோதனையும், பின்னர் குழந்தைப் பருவம் முழுவதும் தொடர்ந்து செவியினை பரிசோதித்து கொள்ள மிகவும் முக்கியமானதாகும் என்றும், பிறந்த குழந்தைகளுக்கு செவி ஒலி வெளி கொணர் பரிசோதனை (Oto Acoustic Emission ) மற்றும் மூளை தண்டுவடம் மறுபதில் செவி பரிசோதனை (Auditory Brainstem Response) போன்ற பரிசோதனைகளை செய்வது செவித்திறன் குறையை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து பயிற்சி அளிப்பது மிக முக்கியமானது என தெரிவித்து, 15 மாவட்டங்களில் செவித்திறன் குறையுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான மண்டல ஆரம்ப நிலை பரிசோதனை மையம் துவங்கிட ரூ.316.50 இலட்சங்கள் நிதி ஒப்பளிப்புமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு அதனை ஏற்று, 0–5 வயது வரையுள்ள குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு, செவித்திறன் குறையுடைய குழந்தைகளை ஆரம்பநிலை கண்டறிந்து அவர்களுக்கு ஆரம்பநிலை பயிற்சியும் பரிசோதனைகளை செய்திட ஏதுவாக பகுதி–II திட்டத்தின் கீழ், 15 மாவட்டங்களில் ஒரு மையத்திற்கு ரூ.21.10 இலட்சம் வீதம் 15 மையத்திற்கு ரூ.3,16,50,000/– (ரூபாய் மூன்று கோடியே பதினாறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) கீழ்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு செய்தும் இச்செலவினத்தினை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது:-

| வ.எண். | திட்டத்தின் விவரம். | தொகை ( ரூபாய்) |
|---|---|---|
| தொடரா செலவினம். | | |
| 1. | செவி ஒலி வெளி கொணர் பரிசோதனை ( Oto Acoustic Emission- Portable Screener) | ரூ. 4,50,000/– |
| 2. | மூளை தண்டுவடம் மறுபதில் பரிசோதனை ( ABR – Diagnostic Audiometre) | ரூ. 8,50,000/– |
| 3. | தூய ஒலி செவி மானியுடன் பார்த்தல்– பார்த்தலை வளப்படுத்தும் பரிசோதனை வசதி. (Diagnostic Audiometre with free field Audiometre/ Peep show Audiometre) | ரூ. 3,00,000./– |
| 4. | ஒலி உட்புகாத அறை (Sound treated rooms two room) | ரூ. 4,25,000/– |
| 5. | குளிர்சாதன அறை. (Air Conditioner) | ரூ. 35,000/– |
| 6. | அறைகலன்/ பரிசோதனை நாற்காலி/ டேபிள் | ரூ. 30,000/– |
| 7. | செவிமானி– விளக்குடன் (Otoscope with Light) | ரூ. 20,000/– |
| | மொத்தம். | ரூ.21,10,000/– |

(ரூபாய் இருபத்தோரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்)
ஒரு மையத்திற்கு : ரூ. 21.10 இலட்சங்கள் x 15 மையங்கள் =ரூ. 316.50 இலட்சங்கள். (ரூபாய் மூன்று கோடியே பதினாறு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்).

3. மேற்காணும் செலவினத்தை இவ்வாணையின் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப் வேண்டும் எனவும், கூடுதல் தொகை/ செலவினம் மேற்கொள்ளாமல்

ஏதேனும் இருப்பின் அதனை அரசுக் கணக்கில் திரும்ப செலுத்த வேண்டும் எனவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்– 101–மாற்றுத் திறனாளிகள் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் – MN– செவித் திறன் குறைபாடுடையோருக்கான மண்டல ஆரம்ப நிலை பரிசோதனை மையத்தினை நிறுவுதல் – 09–உதவித் தொகை–03–குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
(துதொகு.2235–02–101–MN–0938)

5. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் அத்துறையின் அ.சா.எண். 31898/நிதி(சந)/14, நாள் 16.6.14–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு துணைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18.
தலைமைக் கணக்காயர், சென்னை–18. (பெயரில்)

**நகல்:**
நிதி (சந)த் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர் ( மாற்றுத் திறனாளிகள் நலத் துறை) அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.